THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, 31st March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Collection of Show Tax and Entertainment Tax (Empowering the Municipalities)

* 4 *S.N.Q.*—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received resolutions adopted by several Municipal Councils to empower them to reduce the amount of show tax and the entertainment tax levied for cinematograph exhibitions; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

திரு. ம. கமலநாதன் : *தலைவர் அவர்களே, இந்த காட்சி வரி, கேளிக்கை வரி எந்த அளவுக்குப் போடலாம் என்று அரசினர் ஆணை கூறுகிறது. எந்த அளவிற்கு என்று சொல்லும்போது 300 சத வீதம் போடலாம் என்று கூறுகிறது. எங்கள் பகுதியில் குறைந்த அளவுக்குப் போடவேண்டுமென்று 150 சத விகிதம் போடவேண்டுமென்று போட்டு அதைப் பற்றி அரசினர் கெஜட்டில் விளம்பரப்படுத்த வேண்டுமென்று அரசினருக்கு அனுப்பியபோது நாங்கள் குறிப்பிட்ட வரையறை வரை போட வேண்டுமென்று சொல்லி அதைத் திருப்பி அனுப்பினார்களே ஏன் ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *அது ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட். அதைப் பற்றி அவர்களைக் கேட்டால் தான் சொல்ல முடியும்.*

நீர்ப்பாசன வசதி, கள்ளக்குறிச்சி வட்டம்

*** 442 கேள்வி—திரு. எல். ஆனந்தன் :** *கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—*

கள்ளக்குறிச்சியில் வடக்குப் பகுதியில் உள்ள பாக்கம், ரிஷிவந்தியம், சங்கராபுரம் பிர்க்கா போன்ற வரண்ட பிரதேசங்களுக்கு சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து வலதுபுறம் ஓர் வாய்க்கால் வெட்டி நீர்ப்பாசன வசதி செய்ய அரசாங்கத்துக்கு **உத்தேசமுண்டா ?**

[31st March 1964

THE HON. SRI R. VENKATARAMAN : There is no proposal to excavate a canal from Sathanur Reservoir to provide irrigation facilities to Pakkam and other places mentioned by the Member.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாக்கம் சங்கராபுரம் போன்ற அந்தப் பகுதிகளுக்கு இந்தக் கால்வாயை விஸ்தரிக்காவிட்டாலும் சாத்தனூர் அணையின் வட பகுதியிலிருந்து செஞ்சி பகுதிக்காவது கால்வாயை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது இருக்கும் தகவலில் சாத்தனூர் ரிசர்வாயர் தண்ணீரானது இப்போது இருக்கிற ஆயக்கட்டுக்கும், மேற்கொண்டு இப்போது இருக்கிற ஆயக்கட்டை ஸ்டெபிலைஸ் செய்யவும் தான் போதும் என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். விஸ்தரிப்பதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நாங்கள் எப்போதுமே சாத்தனூர் நீரைத்தான் எதிர்பார்த்திருக்கிறோம். எங்களுக்கு கிடைக்குமா கிடைக்காதா என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனிக் கேள்வி போட்டால் தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்துச் சொல்ல முடியும். இப்போது இருக்கும் தகவல்படி போதிய அளவுக்குத் தான் இருக்கிறது. விஸ்தரிப்பதற்கில்லை என்று இருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள்

* 446 கேள்வி—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளை குடி அமைக்கக்கோரி மத்திய சர்க்காரிடமிருந்து சென்னை சர்க்காருக்கு தகவல் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The matter is under examination.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளை ராமநாதபுரம் ஜில்லாவிலே குடியேற்ற வசதி இல்லை என்று ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் அவர்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான தகவல் சர்க்காரிடத்தில் இல்லை. இப்போதுதான் அவர்களை எந்தெந்த இடங்களில் ரீஹாபிலிடேட் செய்ய முடியும் என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.